பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 05 திங்கட்கிழமை 20.07.2020 கதிர் 124

# முஸ்லிம்களை அநாதையாக்கி கூட்டமைப்பின் விஞ்ஞாபனம்!

## முஸ்லிம் காங்கிரஸ் கவலை



கொழும்பு, ஜூலை 20

முஸ்லிம் மக்கள் தொடர்பில் அக்கறை இல்லாமல் - அவர்களை அநாதையாக்கி விடும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞா பனத்தை வெளியிட் டுள்ளது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் எச்.எம்.எம். ஹரீஸ் கவலை தெரிவித்தார்.

2

## இரண்டாம் தவணை விடுமுறை ஒக். 9இல்

கொழும்பு, ஜூலை 20

அனைத்து அரச பாடசாலைகளும் இரண்டாம் தவணைக்காக ஒக்ரோபர் 9ஆம் திகதி மூடப்பட்டு நவம்பர் 16ஆம் திகதிவரை மீள ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் 11, 12 மற்றும் 13 தரங்களில் பயிலும் மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கும் வகையில் பாடசாலைகள் இடம்பெறும்.

ஏனைய தரங்களுக்காக வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## உயர்தரப் பரீட்சை ஒக். 12இல் ஆரம்பம்

### ஒக். 11 புலமைப்பரிசில்

கொழும்பு, ஜூலை 20

2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சை ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்ரோபர் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2


## புதிய நாடாளுமன்றில் '19' இற்குச் சாவு மணி!

### இதில் மாற்றமில்லை என்கிறார் பீரிஸ்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையில் புதியநாடாளுமன்றம்கூடும். இதன்போது முதல் வேலையாக அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கு முடிவு கட்டுவோம். இந்தத் தீர்மானத்தில் மாற்றம் எதுவும் இல்லை.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர்

2



## முன்னாள் போராளிகளுக்கு வேண்டுமென்றே மிரட்டல்!

### விஜயகலா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 20

முன்னாள் போராளிகளை அச்சுறுத்தும் செயற்பாடு வேண்டும் என்றே இடம்பெறுவதாக முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முதன்மை வேட்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

பளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2

## வவுனியாவில் கடும் காற்று



வவுனியா, ஜூலை 20

வவுனியாவில் இன்று கடும் காற்றுடன் மழை பெய்தது. இதன்போது மரம் முறிந்து விழுந்து இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இன்று பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவில் பிற்பகல் வேளை கடும் காற்று வீசியதுடன் மழையும் பெய்தது.

2

## எல்லை தாண்டிய மீனவர் கொரோனா சோதனைக்கு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 20

தனிப் படகில் கடற்தொழிக்குச் சென்ற மீனவர், எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றின் அனுமதியுடன் கொரோனா தொற்றைக் கண்டறியும் பி.சி.ஆர். பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அவர், அச்சுவேலிப்

2

## காட்டு யானை தாக்கிய விரிவுரையாளர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். பல்கலைக்கழகக் கிளிநொச்சி வளாகத்தில் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்கான விரிவுரையாளர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார்.

2






## குடாநாட்டில் இராணுவம் அரசியல் செய்யவில்லை

### யாழ். படைத் தளபதி கூறுகிறார்



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் அரசியலில் ஈடுபடுகின்றனரா என பொதுமக்களிடம் போய் கேட்டுப் பார்த்தால் விளங்கும். அரசியல்வாதிகள் போலிப் பிரசாரம் மேற்கொள்கிறார்கள்.

2

## எல்லை தாண்டிய .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

அச்சுவேலி வளலாயைச் சேர்ந்த செல்வரத்தினம் செல்வதாஸ் (வயது -35) என்பவரே இவ்வாறு வழித் தடம் மாறி சர்வதேசக் கடல் எல்லைக்குள் சென்றுள்ளார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் அவர் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சேர்த்து பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த நீதிமன்றம் அனுமதியளித்தது.

அவர் நேற்று இரவு யாழ். வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

## வவுனியாவில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடும் காற்று காரணமாக வவுனியா தெற்கு வலயக் கல்வி திணைக்களத்துக்குள் நின்ற வேப்ப மரம் ஒன்று அடியோடு முறிந்து விழுந்தமையால் கட்டடம் ஒன்று பகுதியளவு சேதமடைந்துள்ளது.

அத்துடன், வவுனியா - ஹொரவப்பொத்தானை வீதியில் இறம்பைக்குளம், இரண்டாம் கட்டை ஆகிய பகுதிகளில் வீதிக்கு குறுக்காக மரங்கள் முறிந்து விழுந்தமையால் சுமார் ஒரு மணிநேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் இறம்பைக்குளம் பகுதியில் முறிந்து விழுந்த மரத்திற்குள் அகப்பட்டு காயமடைந்துள்ளார்.

இவைதவிர, வைரவபுளியங்குளம், உள்வட்ட வீதி உள்ளிட்ட பல பகுதிகளில் பல மரங்கள் கடும் காற்றினால் முறிந்து வீழ்ந்துள்ளன.

## காட்டு யானை தாக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றிரவு காட்டு யானை தாக்குத லுக்கு இலக்கான இவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில் இன்று காலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக தொழில்நுட்பப் பிரிவு விரிவுரையாளரான கொழும்பு களனி பகுதியைச் சேர்ந்த காயத்திரி டில்ருக்சி (வயது-32) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விரிவுரையாளர் விடுதியில் தங்கியிருந்த இவர் மற்றுமொரு விரிவுரையாளருடன் விகாரைக்குச் சென்று வழிபட்டு விட்டுத் திரும்புகையிலேயே யானைத் தாக்குதலுக்கு இலக்கானார்.

## குடாநாட்டில் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- இப்படிக் கூறியிருக்கின்றார் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய.

இராணுவத் தளபதியிடம் இன்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை இராணுவத் தளபதி புங்குடுதீவுப் பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டு அங்கு இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை வீட்டு உரிமையாளர்களிடம் கையளித்தார். இது தொடர்பில் சில அரசியல்வாதிகள், இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் அரசியலில் ஈடுபடுகின்றனர் எனக் குற்றம் சாட்டுகிறார்கள். இதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். இராணுவத்தினராகிய எமக்குப் பொது மக்களுக்கான மனிதாபிமானச் செயற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நாங்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் வீடற்றவர்களுக்கு வீடுகளை வழங்குவதோடு வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு சைக்கிள்களை வழங்கி வருகின்றோம். அத்தோடு பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியுள்ளோம் - என்றார்.

# ஐ.தே.கவை எவராலும் அழிக்கவே முடியாது; தலைமைப் பதவிக்கு நான் தகுதியானவன்!

## பரப்புரைக் கூட்டத்தில் நவீன் சூளுரை

ஐக்கிய தேசியக் கட்சியை எவராலும் அழிக்க முடியாது. இது உயிர்ப்புடன் இருக்கும் கட்சி. கடந்த 26 ஆண்டுகளாக ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வரும் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும். அந்தத் தலைமைத்துவத்தை ஏற்பதற்குத் தேவையான தகுதி என்னிடம் இருக்கின்றது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

ஹட்டன், திம்புல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் நேரடியாகப் பேசும் - நேரடியாக வேலைகளைச் செய்யும் அரசியல்வாதி. ஐக்கிய தேசியக் கட்சியில் நான் உயர் மட்டத்தில் இருக்கின்றேன் என நினைக்கின்றேன். நான் கட்சியின் தலைவராக முடியும் என எண்ணுகிறேன்.

நான் கட்சியின் தலைவராகத் தெரிவாகி நாட்டின் உயர் பதவிகளுக்குச் செல்வேன். ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்குச் செல்வேன். அப்படிச் சென்றாலும் நான் 20 ஆண்டுகள் அரசியலில் இருக்கும் நுவரெலியா மாவட்ட மக்களுக்கே முதலில் வேலை செய்வேன். ஐக்கிய தேசியக் கட்சியில் நான் இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்தில் இருக்கின்றேன். முதலாவது இடத்துக்குச் செல்ல சிறிய உந்துதலைக் கொடுக்க நான் இளம் தலைவர்களைக் கட்சிக்குள் கொண்டு வந்துள்ளேன்.

அவர்கள் கட்சியை முன்னெடுத்துச் செல்வார்கள். நுவரெலியாவில் பல இளம் தலைவர்களை நான் உருவாக்கியுள்ளேன். ஐக்கிய தேசியக் கட்சி என்பது நாட்டிலுள்ள மிகவும் பழமையான கட்சி. அந்தக் கட்சி மிகப் பெரிய தலைவர்களை உரு வாக்கியுள்ளது.

இந்த நாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி சேவைகளைச் செய்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியில் ஓரளவு பிளவு ஏற்பட்டுள்ளது. இதனை அனைவரும் அறிவார்கள். போரை முடிவுக்குக்கொண்டு வருவதற்காகவே நான் மஹிந்த ராஜபக்ஷவுடன் மூன்றாண்டுகள் இணைந்திருந்தேன். இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குத் திரும்பி வந்து தொடர்ந்தும் கட்சியில் இருக்கின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சியை எவராலும் அழிக்க முடியாது. இது உயிர்ப்புடன் இருக்கும் கட்சி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கைச்சின்னம் நாற்காலியாகவும் வெற்றிலையாகவும் தற்போது தாமரை மொட்டாகவும் மாறியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னம் அப்படியல்ல. தொடர்ந்தும் யானைச் சின்னமாகவே இருந்து வருகின்றது. யானைச் சின்னத்தில் இருந்து தொலைபேசிக்குச் சென்றால், யானை முழ்ந்துவிடும். அதற்கு இடமளிக்க முடியாது. கட்சியை எவராலும் அழிக்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலும் மாற்றம் தேவை. ஒருவர் 26 ஆண்டுகள் கட்சியின் தலைவராக இருக்க முடியாது - என்றார்.

## உயர்தரப் பரீட்சை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
க.பொ.த. உயர்தரப் பரீட்சை செப்ரெம்பர் 7ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 2ஆம் திகதிவரையும் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை செப்ரெம்பர் 13ஆம் திகதியும் நடைபெறும் என்று கல்வி அமைச்சு முன்னர் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் மாணவர்களினது கோரிக்கைக்கு அமைய பரீட்சைகள் ஒரு மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்திரானந்த தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஒக்ரோபர் 12ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 6ஆம் திகதி வரையும் மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் 11ஆம் திகதியும் நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## முஸ்லிம்களை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கல்முனையிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

இணைந்த வடக்கு - கிழக்கு தனி மாநிலமாக மாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது. முஸ்லிம் மக்கள் தொடர்பில் அக்கறை இல்லாமல் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டுள்ளது. இது கூட்டமைப்பின் திட்டமிட்ட சதியாகும்.

முஸ்லிம்களை அநாதையாக்கிவிடும் வேலைகளை தமிழ்த் தலைமைகள் செய்வதை தந்தை செல்வா இருந்திருந்தால் ஏற்றுக்கொள்ள மாட்டார். தாராள மனதுடன் செயற்பட்ட தமிழ்த் தலைமைகள் மத்தியில் இப்போதுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவது மனவேதனைக்குரியது - என்றார்.

## முன்னாள் போராளி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவிக்கையில் -

முன்னாள் போராளிகள் மீண்டும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. 2009 யுத்தம் முடிவடைந்த பின்னர் இருந்த நிலைமையைப் போன்று தற்போதும் முன்னாள் போராளிகள் அச்சுறுத்தப்படும் நிலை இங்கே உருவாகியுள்ளது. வீடுகளுக்கு செல்லும் புலனாய்வாளர்களால் முன்னாள் போராளிகள் அச்சுறுத்தப்படுகிறார்கள். அத்தோடு அவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இதனால் முன்னாள் போராளிகளின் குடும்பங்கள் மிகவும் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றன.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி அரசில் எந்த ஒரு அச்சுறுத்தலும் இல்லாது முன்னாள் போராளிகளுக்கான வேலைவாய்ப்புகள் மற்றும் பல்வேறு பட்ட செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. தற்போது முன்னாள் போராளிகளுக்கு கடும் அச்சுறுத்தல் உள்ள நிலையை காணக்கூடியதாகவுள்ளது - என்றார்

## புதிய நாடாளுமன்றில் ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சமான எதிர்காலக் கொள்கையைச் செயற்படுத்தும் பலமான நாடாளுமன்றம் தோற்றம் பெற வேண்டும் என்பதில் பெரும்பாலான மக்கள் அதிகளவில் அக்கறைகொண்டுள்ளார்கள். நிறைவேற்றுத் துறையும், சட்டத்துறையும் முரண்பட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்த அனுபவம் மக்களுக்கு உண்டு. ஆகவே, மீண்டும் அந்தத் தவறை மக்கள் செய்யமாட்டார்கள்.

நல்லாட்சி அரசின் முறையற்ற செயற்பாடுகளினால் ஏற்பட்டுள்ள அரசமைப்புசார் மற்றும் பொதுப்பிரச்சினைகளுக்குப் புதிய அரசில் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்காகவே மூன்றிலிரண்டு பெரும்பான்மை ஆதரவைக் கோருகிறோம். காலம் தாழ்த்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை இவ்வருடத்துக்குள் நடத்த சாதகமான தேர்தல் முறைமையை உருவாக்க வேண்டும்.

2018 ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலின் உண்மைக் காரணி இதுவரையில் அறியப்படவில்லை. தேசிய பாதுகாப்பு பலவீனமடைந்தால் அடிப்படைவாதம் மீண்டும் நாட்டில் தலைத்தூக்கியது. தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தத் தற்போது நடைமுறையிலுள்ள பாதுகாப்புசார் சட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டு தேவைக்கேற்ப புதிய சட்டங்கள் உருவாக்கப்படும்.

நல்லாட்சி அரசால் ஏற்படுத்தப்பட்ட அரசமைப்பின் 17 மற்றும் 19ஆவது திருத்தங்களில் உருவாக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு தலைப்பட்சமாகவே செயற்படுகின்றன என்பதற்கு கடந்த காலங்களில் இடம்பெற்ற பல சம்பவங்கள் சிறந்த எடுத்துக்காட்டு. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பொதுத்தேர்தலில் அரசியல்வாதிகளுக்கு ஆதரவாக மேடையேறுகின்றார்கள்.

உயர் அதிகாரிகளை நியமிக்கும் அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளார்கள். தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் குறிப்பிடுகிறார். ஆகவே, இவர்களின் செயற்பாடுகளினால் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. உயர் அதிகாரிகளைப் பதவிக்கு நியமிக்கும் அதிகாரம் புதிய அரசில் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படும் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

பத்திரிகைத்துறை வெற்றிடங்கள்

☛ உதவி ஆசிரியர்
☛ ஒப்பு நோக்கர்கள்

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு -
காலைக்கதிர்
இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
076 443 8622

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தோற்றுப் போன விடயம் அல்ல

நல்லாட்சி அரசின் காலத்தில், இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கியதான புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் கணிசமான தூரத்துக்கு - முக்கால் திட்டத்துக்கு - முன்னேறின.

முழு நாடாளுமன்றமுமே புதிய அரசமைப்பை உருவாக்கும் அரசமைப்புப் பேரவையாக மாறி, புதிய அரசமைப்பை உருவாக்கும் தீர்மானம் ஏக மனதாக எட்டப்பட்டது. இந்த நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களுமே அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர் என்று குறிப்பிடத்தக்கது.

புதிய அரசமைப்புக்கான வரைவைத் தயாரிப்பதற்காக ஒரு வழிகாட்டல் குழு அமைக்கப்பட்டது. அது எழுபத்தியைந்து தடவைகளுக்கு மேல் கூடி ஆராய்ந்தது.

அத்துடன் ஏழு உப குழுக்களை நியமித்து, அவற்றின் மூலம் பல்வேறு விடயங்களை ஆராய்ந்து விரிவான அறிக்கைகளைப் பெற்றது. அவற்றையும், தனது கூட்டங்களில் ஆராயப்பட்ட விடயங்களையும் அடிப்படையாக வைத்து விரிவான இடைக்கால அறிக்கை ஒன்றையும் வழிகாட்டல் குழு தயாரித்தது.

அந்த இடைக்கால அறிக்கை குறித்து முழு நாடாளுமன்றமுமே அரசமைப்புப் பேரவையாகக் கூடி சுமார் இரண்டு வாரங்கள் விரிவாக விவாதித்தது.

இந்த விவாதத்தின் அடிப்படையில் ஒரு புதிய அரசமைப்புக்கான நகல் வடிவத்துக்குரிய யோசனைத் திட்ட வரைவு தயாரிக்கப்பட்ட நிலையில் அந்த முயற்சி முடங்கிப் போனது.

இந்த புதிய அரசமைப்பு உருவாக்க முறையில் மூன்று பிரதான அம்சங்கள் அடங்கியிருந்தன.

ஒன்று - நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையில் மாற்றங்கள்.

இரண்டாவது - தேர்தல் சீர்திருத்தங்கள்.

மூன்றாவது - அதிகாரப் பகிர்வுத் திட்டம்.

இதில் மூன்றாவது விடயமான - தமிழர் தரப்புக்கு முக்கிய அம்சமான - அதிகாரப் பரவலாக்கல் விவகாரம், வழிகாட்டல் குழுவில் பங்குபற்றிய பல கட்சிப் பிரமுகர்களின் ஏகமனதான ஒப்புதலுடன் தான் தயாரானது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எது, எப்படி என்றாலும் இந்த முயற்சி அரைக்கிணறு தாண்டும் நிலையில் முடிவுற்றமையினால் பயனற்றது என்றும், அர்த்தமற்ற முயற்சி என்றும் கூறும் தரப்புகள், நல்லாட்சி அரசின் நான்கரை ஆண்டு காலத்தில் கூட்டமைப்பினர் என்ன செய்து முடித்தார்கள் என்றும் கேள்வி எழுப்புகின்றார்கள்.

இப்படிக் கூறுகின்றவர்கள் வரலாற்றை ஒரு புறம் திரும்பிப் பார்க்க வேண்டும்.

மாற்ற முடியாத ஓர் ஒழுங்கு முறையாகக் கடந்த எழுபத்தியிரண்டு ஆண்டுகளாக இந்த நிலைமையே நீடித்திருக்கின்றது.

தந்தை செல்வா காலத்தில் நடந்த அஹிம்சை முறையான முயற்சிகளினாலும் சரி, பின்னர் நாம் முன்னெடுத்த முப்பது ஆண்டு கால ஆயுத வழிப் போராட்டத்தினாலும் சரி நாம் எட்டியவை யாவும் இப்படி அரைகுறையில்தான் நிற்கின்றன.

தந்தை செல்வநாயகம் கண்ட பண்டா - செல்வா ஒப்பந்தமாகட்டும், டல்லி - செல்வா உடன்படிக்கையாகட்டும் நிறைவேறவேயில்லை.

ஜே.ஆர். - அமிர் பேச்சுகளாகட்டும், அதன் பின்னர் வந்த இலங்கை - இந்திய ஒப்பந்தமாகட்டும் அவற்றுக்கும் இந்தக் கதிதான்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து, அதில் காணப்பட்ட இணக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒன்றரை லட்சம் இந்தியத் துருப்புகள் அமைதி காக்கும் படைகள் என்ற பெயரில் தமிழர் தேசத்தை ஆக்கிரமித்து நிலை கொண்டன. அரசமைப்புக்கு 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு, ஒப்பந்தத்தில் உடன்பாடு காணப்பட்ட பல இணக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால் அரசமைப்பில் நிறைவேற்றப்பட்ட அந்த இணக்க ஏற்பாடுகள் கூட - பொலிஸ், காணி அதிகாரம் போன்ற அதிகாரப் பகிர்வு விடயங்கள் கூட - முப்பத்தியிரண்டு ஆண்டுகள் கடந்தும் நிறைவேற்றப்படவேயில்லை. மாறாக, அதற்குப் பிறகு கொண்டு வரப்பட்ட 'திவிநெகும' சட்டங்கள் போன்றவை மூலம் அந்த அதிகாரப் பகிர்வு ஏற்பாடுகள் நீர்த்துப் போகவே செய்யப்பட்டன.

அது போன்றதே நோர்வேயின் சமரச முயற்சியில் எட்டப்பட்ட ஒஸ்லோ அறிவிப்புமாகும்.

இப்படி எட்டப்பட்ட இணக்கங்கள் எல்லாவற்றையும் நிரகரித்துத் தூக்கிக் கடாசுவதே தென்னிலங்கையின் கொழும்பு அரசின் பரவணிப் பழக்கம்.

அந்த வகையில் பார்த்தால் அதிகாரப் பகிர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சியை நகல் யாப்புத் தயாரிக்கும் நிலைவரை மேம்படுத்தியது ஓர் இமாலய சாதனைதான்.

இந்தியாவின் நேரடிப் பங்களிப்பு, அழுத்தம், இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புப் பிரசன்னம் ஆகியவற்றுடன் இலங்கை அரசமைப்புக்குள் திணிக்கப்பட்ட 13 ஆவது திருத்தமே அதன் அடிப்படையான பெரும் பகுதி நடைமுறைப்படுத்தப்படாமல் சீரழிந்து போக, நடைமுறைப்படுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பு உட்பட்ட பல விடயங்கள் புதிய சட்டங்கள், தீர்ப்புகள் மூலம் செயலிழந்து போக, அந்த முழு முயற்சியுமே பல்லிளித்து நிற்கின்றது.

அதனுடன் ஒப்பிடுகையில் நல்லாட்சி அரசின் காலத்தில் கூட்டமைப்பின் அழுத்தத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்பு முயற்சி அப்படி ஒன்றும் தோற்றுப் போன விடயமே அல்ல.

# கூட்டமைப்பின் பலமே தமிழ் மக்களின் பலம்!

## முன்னாள் எம்.பி. சரவணபவன் தெரிவிப்பு



தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கும் வாக்குகள் கூட்டமைப்பைப் பலப்படுத்தும். கூட்டமைப்பு பலம் பெற்றால் அதுவே தமிழர்களின் பலமாகவும் அமையும் – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

மந்துவில் கிழக்கில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுயேட்சைக் குழுக்கள், கட்சிகள் என்று சுமார் 33 தரப்பினர் போட்டியிடுகின்றனர். அதில் கூட்டமைப்பைத் தவிர்த்தால் ஏனைய 32 தரப்புக்களில் சுமார் 320 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்கள் அனைவரினதும் இலக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மழுங்கடிப்பதே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன செய்தது என்று இன்று பலர் கேட்கின்றனர். அவர்களிடம் நான் கேட்கின்றேன் 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற செய்யவில்லை?'. வடக்கில் கடந்த 5 ஆண்டுகளில் சுமார் 52 ஆயிரம் மில்லியன் பெறுமதியான அபிவிருத்திப் பணிகளை நாம் மேற்கொண்டுள்ளோம்

2015ஆம் ஆண்டு நாடாளுமன்றம் செல்லும்போது வலிகாமம் வடக்கில் 7 ஆயிரம் ஏக்கர் காணி அரசால் கையகப்படுத்தப்பட்டது. பாதுகாப்புத் தேவைகளுக்காக இந்த ஏழாயிரம் ஏக்கரும் தேவையென்று தெரிவித்தனர். எனினும், நாம் விடவில்லை. தொடர்ச்சியாக வாதாடினோம். 4 ஆயிரம் ஏக்கர்களை விடுவித்துள்ளோம். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்காவிட்டால் ஆயிரத்து ஐநூறு ஏக்கர்களை மேலதிகமாக விடுவிக்க நடவடிக்கை எடுத்திருப்போம்.

நாம் நாடாளுமன்றம் செல்லும்போது 227 அரசியல் கைதிகள் இருந்தார்கள். இப்போது 91கைதிகள் இருக்கிறார்கள். எவருடைய முயற்சியால் இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்? எத்தனையோ வருடங்கள் சிறையில் இருந்தவர்களை நாம் விடுவித்தோம். பலம் மிக்க அமைப்பாக கூட்டமைப்பு இருந்தபடியால் எமது கோரிக்கை செவிசாய்க்கப்பட்டது.

இதற்கப்பால் எத்தனையோ வேலைகள் நடைபெற்றன. சர்வதேச சமூகத்துடன் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. சர்வதேச சமூகம் தமிழர்கள் பிரதிநிதிகளாக அங்கீகரித்ததும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத்தான். டக்ளஸையோ அங்கஜனையோ அல்லது விஜயகலாவையோ தமிழர்களின் பிரதிநிதிகளாக சர்வதேச சமூகம் ஏற்கவில்லை.

இன்று எங்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்தது யார்? தொடக்கியது ஐக்கிய தேசியக் கட்சி. முடித்து வைத்தது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி. ஆனால் அது பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது. பெரும்பான்மை இனம் என்றைக்கும் ஏமாற்றிக்கொண்டுதான் இருக்கும். எங்களிடம் வந்து வாக்குக்கேட்க அவர்களுக்கு உரிமையில்லை.

வெற்றிவிழா கொண்டாடிய ராஜபக்ஷ மண்ணை முத்தமிட்டதை கண்ணால் கண்டோம். வெற்றி விழா கொண்டாடும்போது தமிழர்கள் மனம் எவ்வளவு புண்படும் என்று அவர் நினைத்தாரா? இது ஒன்று போதாதா அவர்களைப் புரிந்துகொள்ள. வெற்றிவிழாக்குப் பின்னர் பல வாக்குறுதிகளை சர்வதேச சமூகத்துக்கு மஹிந்த கொடுத்தார். இந்தியாவுக்கும் கொடுத்தார். ஆனால், அவற்றில் ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை.

தற்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்று மஹிந்த கேட்கின்றார். எதற்காகக் கேட்கின்றார்? அவரின் நோக்கம் 19ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாது ஒழிப்பதுதான். அவ்வாறு மூன்றில் இரண்டு கிடைத்தால் ஒரு போலி அரசமைப்பையும் மஹிந்த தயாரிப்பார். அதன்மூலம் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதாக அவர் சர்வதேசத்துக்குக் காட்டிக்கொள்வார்.

திருகோணமலை மாவட்டம் இன்று எங்கள் கையை விட்டு போய்க்கொண்டு இருக்கின்றது. ஒரு சிங்களவர் இல்லாத இடங்களில்கூட விகாரைகள் கட்டப்படுகின்றன. இதே நிலைமை யாழ்ப்பாணத்திலும் இடம்பெறலாம். நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கும் வாக்குகள் கூட்டமைப்பைப் பலப்படுத்தும். கூட்டமைப்பு பலம் பெற்றால் அதுவே தமிழர்களின் பலமாகவும் அமையும் – என்றார்.

# அரசியலில் ஜம்பவான்கள் எனக் கூறும் அரசியல்வாதிகள் தேர்தல் தோல்விக்குப் தேசிய பட்டியலில் நுழைய முயற்சி

## விடயத்தைப் போட்டுடைக்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

அரசியலில் ஜம்பவான்கள் என கூறிய அரசியல்வாதிகள் இம்முறை பொதுத் தேர்தலில் முழுமையான தோல்விக்கு மத்தியில் தேசிய பட்டியலில் நாடாளுமன்றத்திற்கு வருவதற்கு முயற்சிக்கின்றனர் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை மொனராகலை மெதகம ஆர்.எம். குணசேன மைதானத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போது பிரதமர் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி ரணில் – சஜித் என பிளவுப்பட்டுள்ளதன் மூலம் தோல்வியை ஏற்றுக் கொண்டுள்ளது.

மொனராகலை மாவட்டத்தில் சில அரசியல்வாதிகள் மக்களுக்கு சேவை செய்யாமல் தங்கள் வளர்ச்சியை மாத்திரம் கருத்திற் கொள்வதனால் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவ்வாறான அரசியல்வாதிகளுக்கு இம்முறை மக்களின் வாக்குகள் ஒரு போதும் கிடைக்காதென்பதனை அரசியல்வாதிகள் அறிந்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக தாமரை மொட்டு சின்னத்தின் கீழ் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை அமைத்து உள்ளூராட்சி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு மொட்டு கட்சியால் முடிந்தது.

புதிய கட்சி ஒன்று உருவாக்கினால் ராஜபக்ஷகள் நடுவீதிக்கு செல்ல நேரிடும் என கூறியவர்களை இணைத்துக் கொண்டு இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடக் காரணம், நாட்டை அபிவிருத்தி நோக்கி கொண்டு சென்று பொருளாதாரத்தை மேற்கொண்டு புதிய அத்தியாயம் ஒன்றை உருவாக்க வேண்டும்,நாட்டின் அரசியலை விற்பனை செய்யும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக புதிய சக்தி ஒன்றை கட்டியெழுப்ப வேண்டும் என்பதால் தான் எனப் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

எதிர்கால சந்ததியினருக்காகப் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குதல், விவசாயம் உட்பட பயிர்செய்கைகளை வளர்ச்சியடைய செய்தல், தொழில்நுட்ப கல்வி ஊடாக தொழில்களை உருவாக்குதல் உட்பட பொறுப்புடன் நாட்டை வளர்ச்சியடைய செய்யும் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாக இதன் போது பிரதமர் குறிப்பிட்டார்.

# பீகாரில் மின்னல் தாக்கியதில் மேலும் 10 பேர் பரிதாபப் பலி



*பீகாரில் மின்னல் தாக்கியதில் மேலும் 10 பேர் உயிரிழந்துள்ளனர் அம்மாநிலத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் பெரும்பாலான பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.*

*இந்நிலையில் பூர்னியா, பெகுசராய், சம்பாரன், மதேபுரா உள்ளிட்ட பகுதியில் இடி மின்னலுடன் மழை பெய்து வருகிறது. இதில் மின்னல் தாக்கியதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*இதனால் பீகாரில் கடந்த 3 வாரங்களில் மின்னல் தாக்கியதில் 160 பேர் உயிரிழந்துள்ளனர்.*

*கடந்த மாதத்தின் இறுதியில் 21 மாவட்டங்களில் ஒரே நாளில் மின்னல் தாக்கி 83 பேர் உயிரிழந்தம குறிப்பிடத்தக்கது. இதனிடையே உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா 4 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என முதலமைச்சர் நிதிஷ் குமார் தெரிவித்துள்ளார்.*

## அயோத்தி ராமர் கோவில் பூமி பூஜையில் 250 பேர் கலந்து கொள்வர் எனத் தகவல்

அயோத்தியாவில் வரும் 5 ஆம் திகதி. நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள ஸ்ரீராமர் கோவில் பூமி பூஜையில் 250 பேர் கலந்து கொள்வார்கள் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அன்றைய தினம் காலை 11 மணிக்கு வரும் பிரதமர் மோடி பிற்பகல் 1.10 மணி வரை அங்கு இருப்பார் எனக் கூறப்படுகிறது. 5 ஆம் திகதி காலை 8 மணிக்குத் தொடங்க உள்ள பூமி பூஜை தொடர்பான சடங்குகளில் அயோத்தியாவின் முக்கிய துறவிகள், ஸ்ரீராமர் கோயில் இயக்கம் தொடர்பான மூத்த தலைவர்கள், ஆர்.எஸ். எஸ்., விஷ்வ இந்து பரித் அமைப்புகளின் மூத்த நிர்வாகிகள், சில மூத்த மத்திய அமைச்சர்கள், உ.பி.மாநில அமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற் பார்கள் என சொல்லப்படுகிறது.



பிரதமர் மோடியின் வாரணாசி தொகுதி மற்றும் காசியை சேர்ந்த ஆன்மிக பெரியோர் பூமி பூஜையை நடத்துவார்கள் என கூறப்படுகிறது.

## திருப்பதி முன்னாள் தலைமை அர்ச்சகர் கொரொனாத் தொற்றினால் உயிரிழப்பு

கொரோனாவால் பாதிக்கப்பட்ட திருப்பதி ஏழு மலையான் கோவிலின் முன்னாள் தலைமை அர்ச்சகர் உயிரிழந்தார்.

ஸ்ரீனிவாச மூர்த்தி தீட்சதர் என்ற முன்னாள் தலைமை அர்ச்சகர், கடந்த மூன்று நாள்களாக திருப்பதி சிம்ஸ் மருத்துவமனையில் கொரோனா விற்கு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் தீவிர மூச்சுத்திணறல் காரணமாக இன்று காலை அவர் உயிரிழந்தார்.

திருப்பதி தேவஸ்தானத்தில் 20 ஆண்டுகளாக அர்ச்சகராக பணிபுரிந்தவர் ஸ்ரீனிவாச மூர்த்தி தீட்சதர். ஏற்கனவே தேவஸ்தான அர்ச்சகர்கள் மற்றும் ஊழியர்கள் 158 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள நிலையில், முதல் உயிரிழப்பு நிகழ்ந்திருக்கிறது.




31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

கடந்த (21.06.2020) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

ருக்மணி ஆனந்தவேல்

தோற்றம் 13.08.1944 மறைவு – 21.06.2020

அவர்களின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு (21.07.2020) நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நீர்வேலி கந்தசாமி கோவில் வடக்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வேதவள்ளி மாதர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனை நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி கந்தசாமி கோவிலடி,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

# 2லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு ஒரே நாளில் கொரோனா பீடிப்பு

உலக அளவில் புதிதாக 2லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதால், இதுவரை பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒரு கோடியே 46 லட்சத்தை கடந்துள்ளது.

பல்வேறு நாடுகளில் ஒரே நாளில் 4300 பேர் கொரோனாவுக்கு உயிரிழந்ததால், மொத்த பலி எண்ணிக்கையும் 6 லட்சத்து 8ஆயிரமாக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் ஒரே நாளில் 65ஆயிரம் பேருக்கு



நோய்த்தொற்று பாதிப்பு உறுதியாகியுள்ள நிலையில், அங்கு மொத்தமாக கொரோனா பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 39 லட்சத்தை நெருங்கிறது.

அதற்கு அடுத்தபடியாக, இந்தியாவில் 40 ஆயிரம் பேருக்கும், பிரேசிலில் 24 ஆயிரம் பேருக்கும் ஒரே நாளில் கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. பிரேசிலில் ஒரே நாளில் 716 பேர் உயிரிழந்ததால் அங்கு மொத்த பலி எண்ணிக்கை 80ஆயிரத்தை நெருங்குகிறது.

கடந்த 24 மணி நேரத்தில் ஸ்பெயின் மற்றும் பிரான்ஸில் புதிதாக கொரோனா பாதிப்பு மற்றும் உயிரிழப்பு பதிவாகவில்லை. வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்கள் எண்ணிக்கையும் 87 லட்சத்தை தாண்டியுள்ளது.



# பழைமையான 5 மாடிக் கட்டடம் 200 மீற்றர் தூரம் நகர்த்தி வைப்பு

சீனாவின் ஷாங்காய் நகரில் 90 ஆண்டுப் பழமையான 5 மாடிக் கட்டடம் ஒன்று அதன் பழைமை தன்மை மாறாமல் அப்படியே 200 மீற்றர் தூரம் நகர்த்தி வைக்கப்பட்டது.

அந்தக் கட்டடம் மொத்தம் ஆயிரத்து 950 மீட்டர் பரப்பளவு கொண்டது. 1930ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த கட்டிடத்தை நகர்த்துவதற்காக பூமிக்கு அடியில் டிரெய்லர் இயந்திரங்கள் பொருத்தப்பட்டன.

பின்னர் அந்த 5 மாடி கட்டிடம் அப்படியே புதிய பகுதிக்கு எடுத்து செல்லப்பட்டது. கட்டடத்தை பழைய இடத்தில் இருந்து புதிய இடத்திற்கு எடுத்து செல்வதற்கு ஒரு மணி நேரம் ஆனது.

# சவூதி அரேபிய மன்னர் மருத்துவமனையில்!



சவூதி அரேபிய மன்னர் 84 வயதான சல்மான் பின் அப்துல் அஸிஸ் உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரியாத் பிராந்தியத்தின் ஆளுநராக 50 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய சல்மான், மன்னராக முடிசூடுவதற்கு முன்பு இரண்டரை ஆண்டுகள் பட்டத்து இளவரசராகவும், 2012 ஆம் ஆண்டு முதல் துணை பிரதமராகவும் பணியாற்றியவர்.

இந்த நிலையில், பித்தப்பை வீக்கம் காரணமாக தலைநகர் ரியாத்தில் உள்ள மருத்துமனையில் மன்னர் சல்மான் அனுமதிக்கப்பட்டுள்ளார் அந்நாட்டுச் செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

# அமீரகத்தின் முதலாவது விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது

ஐக்கிய அரபு அமீரகத்தின் முதல் விண்கலம் தனது செவ்வாயை நோக்கிய பயணத்தை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது.

விண்வெளி ஆராய்ச்சியில் காலடி வைத்துள்ள ஐக்கிய அரபு அமீரகத்தின் ஹோப் என்று பெயரிடப்பட்ட விண்கலம் ஜப்பானில் உள்ள அனேகாஷிமா ஏவுதளத்தில் இருந்து உள்ளூர் நேரப்படி காலை 6.58 மணிக்கு ஏவப்பட்டது. மிட்சுபிஷி நிறுவனத்தின் ஹெச் 2 ஏ ராக்கெட் மூலம் ஏவப்பட்ட இந்த விண்கலம் வெண்ணிறப் புகையை உமிழ்ந்தபடி விண்ணை நோக்கிப் பாய்ந்தது.

பூமியில் இருந்து ஹோப் விண்கலம் மொத்தம் 49 கோடியே 35 லட்சம் கிலோ மீட்டர் தொலைவு செவ்வாய் கிரகம் நோக்கி பயணம் செய்ய உள்ளது. இதற்காக பூமியில் இருந்து ராக்கெட்டானது மணிக்கு 34 ஆயிரத்து 82 கிலோ மீட்டர் செலுத்தப்பட வேண்டும். முன்னதாக கடந்த 14ஆம் திகதி ஏவப்பட இருந்த ஹோப், மோசமான வானிலை காரணமாக ஏவுவது தள்ளி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# நடந்த கார் குண்டுவெடிப்பில் சிரியாவில் ஐந்து பேர் மரணம்

சிரியாவில் நடந்த கார் குண்டுவெடிப்பில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

மேலும் 85பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

கிலிஸ் மாகாணத்தின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சைகு கிராமத்தில் இந்த தாக்குதல் சம்பவம் நிகழ்ந்துள்ளது. காயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை அபாய கட்டத்தில் இருப்பதாக உள்ளூர்த் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிரியா பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் குண்டுவெடிப்பு சம்பவத்திற்கு இது வரை எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.



# மலையில் இருந்து சுற்றுலா பஸ் உருண்டு விழுந்தது; மூவர் சாவு!

கனடாவில் சுற்றுலா பஸ் ஒன்று மலையில் இருந்து உருண்டு விழுந்து விபத்துக்குள்ளானதில் 3 பேர் உயிரிழந்தனர்.

ஆல்பர்ட்டா ஜாஸ்பர் தேசிய பூங்காவில் கொலம்பியா ஐஸ்ஃபீல்ட் அருகே உள்ள பனிப்பாறையில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள 27 பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ்ஸே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அவசரகாலப் பணியாளர்கள் மற்றும் தீயணைப்புத் துறையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# 1,700 ஆண்டுகள் பழமையான புத்தர் சிலை அடித்து உடைப்பு

பாகிஸ்தானில் 1700 ஆண்டுகள் பழமையான புத்தர் சிலை அடித்து உடைக்கப்பட்டது தொடர்பாக, 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைபர் - பக்துன்க்வா மாகாணத்தின் மர்தான் மாவட்டத்தில் உள்ள ஒரு விவசாயப் பண்ணையில், அகழ்வாராய்ச்சி மேற்கொண்டபோது காந்தாரநாகரிகத்தில் உருவாக்கப்பட்ட புத்தர் சிலை கண்டெடுக்கப்பட்டது. இந்நிலையில், அப்பகுதியை சேர்ந்த உள்ளூர் மதத் தலைவரின் வலியுறுத்தலின் பேரில், இஸ்லாமிய மதத்திற்கு எதிராக இருப்பதாக கூறி புத்தர் சிலையை ஒரு கும்பல் அடித்து நொறுக்கியுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் சிலையை முழுவதுமாக வெளியே எடுக்காத நிலையில், சம்மட்டியை கொண்டு சிலையை சேதப்படுத்திய செயலுக்கு கடும் கண்டனங்கள் குவிந்து வருகின்றன.



# கொரோனாவில் ஆறு வகை ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸில் 6 வகையைக் கண்டுபிடித்துள்ள ஆய்வாளர்கள், அவற்றின் மூலம் ஏற்படும் அறிகுறிகளை தனித்தனியாக வகைப்படுத்தி உள்ளனர்.

லண்டன் கிங்ஸ் கல்லூரி ஆய்வாளர்கள் கொரோனா வைரஸ்களில் 6 வகையான தனித்துவமான இனங்களை கண்டு பிடித்துள்ளனர். இதன் மூலம் வைரஸ் தாக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் முன்னேற்றம் கிடைத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் நோயாளிகளுக்கு ஏற்பட்டிருக்கும் அறிகுறிகளுக்கு ஏற்ப எந்தவகை வைரஸ் தாக்கியுள்ளது என்பதையும் கண்டறிய இயலும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ச்சியான இருமல், காய்ச்சல் மற்றும் வாசனை இழப்பு ஆகியவை பொதுவாக நோயின் மூன்று முக்கிய அறிகுறிகளாக இருந்தாலும் தலைவலி, தசை வலி, சோர்வு, வயிற்றுப்போக்கு, குழப்பம், பசியின்மை, மூச்சுத்திணறல் மற்றும் சில புதிய அறிகுறிகளையும் கொரோனா நோயாளிகளிடம் இருப்பதை முதல் வகையான காய்ச்சலற்ற நிலையில் தலைவலி, வாசனை இழப்பு, தசை வலி, இருமல், தொண்டைப் புண், நெஞ்சுவலி போன்றவை இருப்பது தெரியவந்துள்ளது.

இரண்டாவது வகையான காய்ச்சலுடன் கூடிய அறிகுறியில் தலைவலி, வாசனை இழப்பு, இருமல், தொண்டைப் புண், காய்ச்சல் மற்றும் பசியின்மை ஏற்படும்.

3 ஆவது வகையில் ஏற்கனவே இருக்கும் அறிகுறிகளுடன் பசியின்மையுடன் வயிற்றுப் போக்கும் காணப்படும்.

4 ஆவது வகையான கடுமையான நிலை ஒன்றில் மேற்கூறிய அறிகுறிகளுடன் உடல் சோர்வு ஏற்படும்.

5 ஆவது நிலையான கடுமையான நிலை 2 இல் பழைய அறிகுறிகளுடன் மனக்குழப்பம் ஏற்படும் எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மிகக் கடுமையான 3 ஆம் நிலையில் பழைய அறிகுறிகளுடன் பசியின்மை, மனக்குழப்பம், மூச்சுத் திணறல், வயிற்று வலி மற்றும் வயிற்றுப் போக்கு போன்றவை ஏற்படும் எனவும் விஞ்ஞானிகள் வகைப்படுத்தி உள்

# தேசிய காங்கிரஸின் கொள்கைகளை ஏற்று தமிழ், சிங்களவர்கள் கைகோர்த்துள்ளனர்!

## பொத்துவில் கூட்டத்தில் இப்படிக் கூறினார் அதாவுல்லா



முஸ்லிம் சமூகத்தை அரசியல் மயப்படுத்துவதற்காக மாத்திரமே, பெருந்தலைவர் அஷ்ரப்பால் உருவாக்கப்பட்ட, அந்த பேரியக்கத்திற்கு அவர் முஸ்லிம் காங்கிரஸ் என்று பெயர் வைத்தார். ஈற்றிலே அந்தப் பெயரின் மூலம், இந்த நாட்டிலே துவேசம் எழுந்துவிடக்கூடாது என்பதற்காக, அதற்கு விடைகொடுத்தார் என

– இவ்வாறு தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய காங்கிரஸ் சார்பாக, போட்டியிடுகின்ற, வேட்பாளர்களை ஆதரித்து, பொத்துவில் பிரதேசத்தில், வேட்பாளர் எம்.எஸ்.எம்.அன்ஸார் தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

முஸ்லிம் சமூகத்தை அரசியல் மயப்படுத்துவதற்காகவே, பெருந்தலைவர் அஷ்ரப்பால் உருவாக்கப்பட்ட, அந்தப் பேரியக்கத்துக்கு அவர் முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரை வைத்து, அதனால் முஸ்லிம் சமூகத்தை அரசியல் மயப்படுத்தினார். ஈற்றிலே அந்தப் பெயர் மூலம், இந்த நாட்டிலே துவேசம் எழுந்துவிடக் கூடாது என்பதற்காக, தனது கடைசி மரணத்தருவாயில் அதற்கு விடை கொடுத்துவிட்டு, தேசிய ஐக்கிய முன்னனி என்ற ஸ்தாபனத்தை உருவாக்கினார்.

குறிப்பாக இந்த நாட்டிலே வாழ்கின்ற, எல்லா சமூகங்களும் சுபீட்சம் பெறுகின்றபோதுதான், முஸ்லிம் சமூகத்துக்கும் சுபீட்சம் கிடைக்கும் என்கின்ற, ஒரு முக்கியமான கருத்தின் அடிப்படையிலேதான், அவர் அவ்வாறு செய்தார்.

பெருந்தலைவர் அஷ்ரப் மரணித்த பின், அவர் விடைகொடுத்த முஸ்லிம் காங்கிரஸ் என்கின்ற, அந்தக் கட்சியை எடுத்துக்கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்களின் துணையோடு, அந்தக் கட்சியை திசை மாற்றி, முஸ்லிம், முஸ்லிம் என்று இனக்கலவரங்களையும், துவேசங்களையும் பரப்புவதற்கான ஆயுதமாக பாவித்து, முஸ்லிம்களை ஏனைய சமூகங்களிலிருந்து பிரித்துவிட்டார்கள்.

இவ்வாறுதான் பிரித்தானியாவில் இருந்துகொண்டு தமிழர்கள், தமிழர்கள் என்று பேசவைத்து, தமிழர்களையும் பிரித்துவிட்டு, இந்த நாட்டிலே வாழுகின்ற மூன்று இனங்களுக்கும், ஒருவருக்கு இரண்டு பேர் எதிரிகள் என்கின்ற நிலைமைகளை ஏற்படுத்திருக்கிறார்கள்.

இவைகளில் இருந்து முதலில் சகலரும் விடுபட வேண்டும். நாடு மகவும் மோசமான சூழ்நிலையிலே சென்றுகொண்டிருக்கிறது என்பதற்காகத்தான், தேசிய காங்கிரஸ் எனும் கட்சியினை அமைத்து, பெருந்தலைவர் விட்டுச்சென்ற இடத்திலிருந்து அவரது பணிகளை தொர்ந்து கொண்டிருக்கின்றோம்.

பெருந்தலைவருடைய கொள்கைகளையும், பணிகளையும் முன்னெடுக்க வேண்டும். இந்த நாட்டிலே வாழ்கின்ற மூவின மக்களுக்கும் பணி செய்ய வேண்டும் என்பதற்காக, சுமார் 20 ஆண்டுகள் போராடிக்கொண்டிருக்கின்றோம். எமது மக்களை இருபது வருடங்களாக ஏமாற்றி அரசியல் செய்து வருகின்றனர். இனியும் நாம் ஏமாற முடியாது. எமது மக்களை வாழ வைப்பதற்காக இளைஞர்கள் தேசிய காங்கிரஸோடு இணைய வேண்டும். அதற்காகப் பொத்துவில் பிரதேச இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். கிழக்கு மாகாணத்திலே வாழ்கின்ற தமிழ், சிங்கள மக்களும் எமது கொள்கைகளை ஏற்று, எங்களோடு கைகோர்த்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் பொத்துவில் இளைஞர்கள் திசைமாறக்கூடாது.

கடந்த காலங்களில் தேசிய காங்கிரஸ் அரசியல் அதிகாரங்களைக் கொண்டிருந்தபோது இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கப்பால் பல்வேறு பணிகளைச் செய்திருக்கின்றது. அந்தக் காலங்களில் எல்லாம் மக்கள் எனக்கு வாக்குப் போட்டார்களா? இல்லையா? என்று நான் ஒருபோதும் சிந்திக்கவில்லை. மக்களுடைய கஷ்டத்திலே அரசியல் செய்வதற்கும் நான் எண்ணவில்லை. சகலரும் எமது மக்கள் என்கின்ற உணர்வுகளோடு செயற்பட்டோம் – என்றார்.

# 25 பாதாளக் குழுக்கள் மேல் மாகாணத்தில்!

## பொலிஸார் அதிர்ச்சித் தகவல்

மேல் மாகாணத்தில் 25 பாதாளக் குழுக்கள் இயங்குகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது. அவற்றுள் 20 குழுக்கள் தொடர்பான தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன.

–இவ்வாறு மேல்மாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்ததாவது:–

திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றச் செயல்களைத் தடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கமைய மேல் மாகாணத்தில் இவ்வாறான திட்டமிட்ட குற்றச் செயல்களில் 25 பாதாளக் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் 20 குழுக்கள் தொடர்பில் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பாதாளக்குழுக்களில் இணைந்து செயற்படும் 388 சந்தேக நபர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவர்களுள் சிலர் சிறைச்சாலைகளில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் சிலர் வெளிநாடுகளிலும், பிணையிலும் சென்றுள்ளனர். இவர்களாலே குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்கள் தொடர்பான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருக்கும் பாதாளக் குழுக்களின் உறுப்பினர்களை அழைத்து வருவதற்காக விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய மேல் மாகாணத்திலிருக்கும் 53 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட பாதாளக் குழுக்களின் உறுப்பினர்களுடன் தொடர்புடைய குற்றச்செயல்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கு எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைக்குள் இருக்கும் பாதாளகுழு உறுப்பினர்கள் தங்களது திட்டங்களை மேற்கொள்வதற்காக உதவி ஒத்தாசைகளை வழங்கும் நபர்கள் மற்றும் அவர்களுக்கு தொலைபேசி, போதைப் பொருள்கள் உள்ளிட்ட பொருட்களைப் பெற்றுக்கொடுக்கும் சிறைச்சாலை அதிகாரிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தப் பாதாளக் குழுக்களைச் சேர்ந்த 26 பேர் இதுவரையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் அனைவரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் – என்றார்.

# கொரோனாத் தொற்று 2,724 நேற்று 20 பேர் அடையாளம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 20 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் கந்தக்காடு போதைப்பொருள் தடுப்பு புனர்வாழ்வு மத்திய நிலையத்துடன் தொடர்புடைய நால்வரும், கட்டாரிலிருந்து வருகை தந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த மூவரும், இந்தியாவிலிருந்து வருகை தந்த இருவரும், ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து வருகை தந்த இருவரும், சவூதி அரேபியாவிலிருந்து வருகை தந்த 9 பேரும் அடங்குகின்றனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2,724 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 2,035 பேர் குணமடைந்துள்ளனர். 678 பேர் தொடர்ந்தும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, 107 பேர் கொரொனாத் தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். கொரொனாத் தொற்றுக்குள்ளான 11 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

# 6,052 பேர் இன்னும் தனிமைப்படுத்தலில்

முத்தரப்பு படைகளால் பராமரிக்கப்பட்டு வரும் 53 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 6,052 நபர்கள் இன்னும் தனிமைப்படுத்தலில் உள்ளனர்.

கொவிட்–19 தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு நிலையங்களிலிருந்து, இதுவரை 24,203 நபர்கள் கட்டாய தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறையை முடித்து வெளியேறியுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்ட நடைமுறையை முடித்த மேலும் 6 நபர்கள் இன்று கல்பிட்டி தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

இதனிடையே 10 பேர் கட்டாரிலிருந்து இன்று நாடுதிரும்பியுள்ளமையுடன், அவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

# இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நாளாந்தம் ஒரு கோடி ரூபா நஷ்டம்

கொரோனா தொற்றுக் காரணமாக இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு நாளாந்தம் சுமார் ஒரு கோடி ரூபா நஷ்டம் ஏற்படுவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பொதுப் போக்குவரத்துச் சேவையின் ஊடாக பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் எண்ணிக்கை குறைவடைந்ததன் காரணத்தினால் போக்குவரத்துத் துறை வீழ்ச்சி அடையும் நிலை ஏற்பட்டுள்ளது

இலங்கைப் போக்கு வரத்துச் சபைக்கு சொந்தமான 5,300 பஸ்கள் நாளாந்தம் குறைந்த வருமானத்திலேயே சேவையில் ஈடுபடுகின்றன என அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்துள்ளார்.

# அஷ்ரப் நகரிலிருந்து மக்களை மீண்டும் வெளியேற உத்தரவு!



அம்பாறை மாவட்டத்திலுள்ள அஷ்ரப் நகரில் குடியிருக்கும் முஸ்லிம் குடும்பங்களை, அங்கிருந்து ஒரு மாத காலத்தினுள் வெளியேறுமாறு வன இலாகா திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

காடு பேணுனர் தலைமை அதிபதி டபிள்யு.ஏ.சி. வேரகொட என்பவரால், 28.02.2020 திகதியிட்டு குறித்த கடிதம் வரையப்பட்டுள்ளது. எனினும், இந்த வெளியேற்ற அறிவித்தல் கடிதமானது கடந்த 24.06.2020 அன்றே தமக்குக் கிடைக்கப் பெற்றது என அஷ்ரப் நகர் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

பழைய திகதியிட்டு இந்தக் கடிதம் வரையப்பட்டுள்ள போதிலும், 24.06.2020 ஆம் திகதியே தபால் நிலையத்தில் முத்திரையிடப்பட்டுள்ளது எனவும் இம்மக்கள் சுட்டிக் காட்டினர்.

இது தொடர்பில் பிரதேசத்தில் வசிக்கும் இப்ராலெவ்வை முகம்மது அலியார் என்பவர் சத்தியக் கடதாசி ஒன்றை குறித்த அதிகாரிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

குறித்த காணியானது தமக்குச் சட்டரீதியாக உரித்துடையது என்றும், அது வன இலாகா திணைக்களத்துக்குரிய காணியல்ல என்றும் குறித்த சத்தியக் கடதாசியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் உயர்நீதிமன்றில் வழக்கொன்று நிலுவையில் உள்ள நிலையில், இவ்வாறு வெளியேற்ற அறிவித்தல் அனுப்பியுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் அம்பாறை மாவட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் எவரும் அக்கறை செலுத்தவில்லை என்றும், இம்மக்களின் காணியைப் பாதுகாக்க உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி குற்றம்சாட்டியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



# வீட்டார் கொள்கை தவறிவிட்டார்கள்

## பொதுநல சிந்தனையும் கூட இல்லை

## வைகின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்

அளவெட்டி, கும்பிளாவளை பிள்ளையார் கோவில் அருகில் நேற்று மாலை நடந்த பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுகாறும் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்தவர்கள் எல்லாம் இப்பொழுது மீன் சின்னத்திற்கு மாறி வருகின்றார்கள். காரணம் வீட்டார் கொள்கை தவறிவிட்டார்கள். அவர்கள் மனதில் பொதுநல சிந்தனைகள் குறைந்து இப்பொழுது சுயநல சிந்தனைகளே மேலோங்கி நிற்கின்றன. நேரத்திற்கு நேரம் அவர்களின் பேச்சுக்கள் மாறிவருகின்றன. சந்தர்ப்பவாதிகளாக வீட்டார் இப்பொழுது வலம் வருகின்றார்கள்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தலைவரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

அளவெட்டியைச் சேர்ந்த பலருடன் எனக்கு நெருங்கிய நட்பு இருந்தது. ஆனால் என் வயதினர் பலர் எம்மை விட்டு இறைவனடி காணச் சென்றுவிட்டனர். முன்னர் மாவட்ட நீதிபதியாக இங்கு கடமையாற்றிய நான் இன்று உங்கள் முன் பிரசன்னமாகி இருப்பது தேர்தலின் போது உங்கள் மதிப்புமிக்க வாக்கைப் பெறுவதற்காக.

இதுகாறும் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்தவர்கள் எல்லாம் இப்பொழுது மீன் சின்னத்திற்கு மாறி வருகின்றார்கள். காரணம் வீட்டார் கொள்கை தவறிவிட்டார்கள். அவர்கள் மனதில் பொதுநல சிந்தனைகள் குறைந்து இப்பொழுது சுயநல சிந்தனைகளே மேலோங்கி நிற்கின்றன. நேரத்திற்கு நேரம் அவர்களின் பேச்சுக்கள் மாறிவருகின்றன. சந்தர்ப்பவாதிகளாக வீட்டார் இப்பொழுது வலம் வருகின்றார்கள்.

கூட்டமைப்பினதும் கூட்டணியினதும் அடிப்படை அரசியல் சிந்தனைகள் ஒரே விதமாக இருப்பதாகத் தென்பட்டாலும் இது வரையில் வீட்டார் அவை பற்றி நடந்து கொண்ட முறை எமக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றது. அவர்கள் தமது விஞ்ஞாபனங்களில் தமிழர் உரிமைகள் பற்றிப் பேசினாலும் அவர்களின் நடைமுறை நடத்தைகள் சலுகை அரசியலுக்கும் ஏமாற்றுகளுக்கும் விலை போவதாக அமைந்துள்ளன.

'நக்குண்டார் நாவிழந்தார்' என்ற பழமொழி கேட்டிருப்பீர்கள். இன்னொருவரிடம் பல்லிளித்து சலுகைகளைப் பெற்றுக் கொண்டால் எம்மால் அவர் செய்யும் வேறு பிழையான காரியங்கள் சம்பந்தமாக மாற்று நடவடிக்கைகள் எடுக்க முடியாமல் போய்விடும். நாவிழந்து விடுவோம். மௌனிகள் ஆகிவிடுவோம்.

சலுகைகள் தருபவர்கள் முட்டாள்கள் அல்லர். அவர்கள் திட்டமிட்டே உதவிகளை எங்களுக்குத் தருகின்றார்கள். உதாரணம் ஒன்றைக் கூறுகின்றேன். இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்த போது ஒரு நாடு அவர்களிடம் கடன் வேண்டுமா என்று கேட்டது. மிகக் குறைந்த வட்டியில் எவ்வளவு வேண்டுமானாலும் கடன் தருவோம் என்று அவர்கள் கூற இலங்கை பாரிய கடன் வாங்கியது. அப்பணத்தில் பல மாட மாளிகைகள் கட்டினார்கள். கூட கோபுரங்கள் கட்டினார்கள். ஏதோ தங்கள் பணத்தில் கட்டுவது போல் ஜம்பமுடன் றாங்கியுடன் பொருளாதார விருத்தியை நாட்டுக்குக் கொண்டு வந்துள்ளதாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது. ஆனால்



நடந்தது என்ன? கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலை வந்ததும் நாட்டின் சில பகுதிகளை குறித்த வெளிநாட்டுக்கு இப்போது அடகுவைத்துள்ளார்கள். இந்த வெளிநாடு தென்கிழக்கு ஆசியா, ஆபிரிக்க நாடுகள் யாவற்றிலும் இவ்வாறு தான் நாடு பிடித்து வருகின்றது.

நாம் சலுகைகளைப் பெற விழையும் போது வருங்காலத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இல்லையேல் நாம் ஒரு பொறிக்குள் அகப்பட்டுக் கொள்வோம். இப்பொழுது தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒரு பொறிக்குள் அகப்பட்டு தத்தளிக்கின்றது. பொறிக்குள் அகப்பட்ட அது மரண பயத்தில் இருந்து கொண்டுதான் இப்போது தேர்தலில் வாக்குகள் கேட்கின்றது.

அவர்களை இனியும் நீங்கள் மேலும் கஷ்டப்பட வைக்க வேண்டியதில்லை. வீட்டிலிருந்து மீனுக்கு மாறுங்கள் என்று கேட்கவே நாம் இன்று இங்கு வந்துள்ளோம். நாம் ஒன்றை மறக்கக்கூடாது.

நாம் யாவருமே 2013 அளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்களாக இருந்தோம். பின் என்ன நடந்தது?

எப்போது தனிமனிதர்கள் தங்கள் முடிவே மக்கள் முடிவு, கட்சியின் முடிவு என்று தம்பட்டம் அடிக்கத் தொடங்கினார்களோ அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை நிலை சறுக்கத் தொடங்கிவிட்டது. 14 ஆவது லூயி மன்னனிடம் அவனுடைய நாடு பற்றிக் கேட்ட போது அவன் விடையிறுத்தானாம் இவ்வாறு - 'நாடா? நாடு என்பது நானே!' என்று கூறினானாம். திருமிரும் அகந்தையுந்தான் இவ்வாறு 14 ஆவது லூயியைப் பேச வைத்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் அவ்வாறான சிந்தனைகள் கொண்ட சிலர் இருக்கின்றார்கள். தான் தோன்றித்தனமாக கொள்கைகளை மாற்றி இப்போது எமது கொள்கைகள் இதுதான் என்று ஒருதலைப் பட்சமாகக் கூறக் கூடியவர்கள் இவர்கள்.

கொள்கைகளை மாற்றலாம். ஆனால் அதற்கு முன்னர் மக்களிடம் அனுசரணை பெற வேண்டும். அவ்வாறு அனுசரணை பெறாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் எனப்படுபவர்கள் தன்னிச்சையாக வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களில் மண் அள்ளிப் போட்டதாலேயே இன்று அக்கட்சி ஆட்டம் கண்டுள்ளது. ஐந்து கட்சிகளுடன் வலம் வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு இப்போது இரண்ட்ரைக் கட்சிகளுடன் கூனிக்குறுகி வாக்குக் கேட்கின்றது. இக் கட்சியில் இப்போது தமிழ் அரசுக் கட்சி, PLOTE மற்றும் TELO வில் அரைவாசியும் இருக்கின்றன.

எம்மைப் பற்றி 'இக் கட்சி விரைவில் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்' என்று கூறிய சில அதிகம் படித்தவர்களின் கூற்றைப் பொய்யாக்கும் விதத்தில் எமது கட்சி தனிக் கட்சி என்ற ஸ்தானத்தில் இருந்து ஐந்து கட்சிக் கூட்டணியாக மாறியுள்ளது. அதாவது தற்போது கூட்டமைப்பு இரண்டரைக் கட்சிகள் என்றால் எமது கூட்டணி 5 கட்சிகள் கொண்டு வலம் வருகின்றது. நாம் இரட்டிப்பாக வளர்ந்து விட்டோம். அவர்கள் அரைவாசியாய்த் தேய்ந்து விட்டார்கள்.

தம்பி பிரபாகரன் அன்று தொடங்கிய கூட்டமைப்பு போய் இன்று அது கூட்டணியாக மாறியுள்ளதை நீங்கள் ஏற்று எமக்கு ஓஜ்கஸ்ட் ஐந்தாம் திகதி தவறாது வாக்களிப்பீர்கள் என்று எண்ணுகின்றேன். வாக்களிப்பது எப்படி என்றும் கூறிவிடுகின்றேன். இம் முறை வாக்குப் பதிவுச்சீட்டு மிக நீளமானது. 33 கட்சிகளின் பெயர்கள் அதில் அடங்குகின்றன. அவற்றுள் 14 சுயேட்சைக் கட்சிகள். இந்த சுயேட்சைக் கட்சிகள் யாரோ சிலரின் அரசியல் சூழ்ச்சிகளின் பிரதிபலிப்பு. அவற்றையும் கூட்டமைப்பு உள்ளடங்கலாக அரசாங்கங்களுக்கு முண்டு கொடுக்கும் கட்சிகளையும் நீக்கினால் இரண்டே இரண்டு கட்சிகள் தான் மிஞ்சும். அவற்றில் ஒன்று எங்களுடையது. மற்றையது வயது வராத, முதிர்ச்சி பெறாத, வாதம் ஒன்றே வாழ்க்கை என்று வாதாடும் சைக்கிள் கட்சி. அதற்குக் காலம் இருக்கின்றது. அதைத் தவிர்த்து அந்த வாக்குச் சீட்டில் மீன் சின்னத்தைத் தேர்ந்தெடுங்கள். சுமார் பத்தாவதாக மீன் சின்னம் இருக்கும். அதற்கு எதிராக ஒரு புள்ளடி போடுங்கள். - என்றார்.


கொள்கைகளை மாற்றலாம். ஆனால் அதற்கு முன்னர் மக்களிடம் அனுசரணை பெற வேண்டும். அவ்வாறு அனுசரணை பெறாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் எனப்படுபவர்கள் தன்னிச்சை யாக வடக்கு,கிழக்கு தமிழ் மக்களின் எதிர் பார்ப்புக்களில் மண் அள்ளிப் போட்டதாலேயே இன்று அக்கட்சி ஆட்டம் கண்டுள்ளது.

# தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம்: கொந்தளிக்கின்றது பௌத்த தேரர்கள் குழாம்

## வடக்கு, கிழக்கில் இரத்த ஆறு ஓடும் என்று எச்சரிக்கை







கொழும்பு, ஜுலை 20

சமஷ்டி என்றால் அது பிரிவினை; தனிநாடுதான். தமிழர்கள் அதை மீண்டும் கோரினால், வடக்கு, கிழக்கில் இரத்த ஆறுதான் ஓடும். அரசு வழங்கும் தீர்வை ஏற்றுக்கொண்டு தமிழர்கள் பேசாமல் அமைதியாக இருக்கவேண்டும்.

– இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், ராவண பலய அமைப்பின் பொதுச்செயலாளர் இத்தானந்தே சுகத தேரர், தேசிய பௌத்த புத்திஜீவிகள் சங்க சபையின் தலைவர் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்றுமுன்தினம் வெளியிட்டது. சமஷ்டி அடிப்படையிலான தன்னாட்சியே தீர்வு என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலே தேரர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:–

சமஷ்டி என்றால் பிரிவினை. அது தனிநாடு என்றுதான் அர்த்தம். அதாவது இந்தச் சமஷ்டி தீர்வு இலங்கையைப் பிளவுபடுத்தும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. நீதிமன்றத்தின் வியாக்கியானத்தையும் தீர்ப்பையும் தூக்கிக் குப்பையில் வீசுங்கள்.

தமிழர்களுக்கு சமஷ்டி வழியில் தீர்வு வழங்க நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். தனிநாடு கோரி மீண்டும் தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டால் வடக்கு, கிழக்கில் இரத்த ஆறுதான் ஓடும். மீண்டும் அப்படியான ஒரு நிலைமை ஏற்பட நாம் விரும்பவில்லை. அரசு வழங்கும் தீர்வைத்தான் தமிழர்கள் ஏற்க வேண்டும். அதைவிடுத்து மீண்டும் ஓர் இருண்ட யுகத்துக்குள் செல்ல வேண்டாம் என்று தமிழர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

ராஜபக்சக்களின் இந்த ஆட்சிக்காலத்தில் அரசுடனும் சிங்கள மக்களுடனும் ஒன்றிணைந்து பயணிக்க தமிழ் மக்கள் முன்வர வேண்டும். இது சிங்கள பௌத்த நாடு. எனவே, தமிழர்கள் தனிவழியில் நிற்காமல் சிங்கள மக்களுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என அழைப்பு விடுக்கின்றோம். அப்போதுதான் சிங்கள மக்கள் விரும்பும் தீர்வைத் தமிழர்கள் பெற்றுக்கொள்ள முடியும். இல்லையேல் தீர்வு என்பது தமிழர்களுக்கு எட்டக்கனியாகவே இருக்கும். பிரபாகரனின் சிந்தனையில் செயற்படுவதை தமிழ் மக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் நிறுத்த வேண்டும் – என்றனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தேவை என்று குறிப்பிடப்பட்டுள்ளமையை சவாலுக்குட்படுத்தி சிங்கள அமைப்புக்களால் கடந்த காலங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், சமஷ்டி பிரிவினை அல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முகக்கவசங்கள் இன்றி செல்வோருக்கு பிரத்தியேக வகுப்பு பொலிஸார் நடத்துவர்

முகக்கவசங்கள் இன்றி பயணிப்போருக்கு பிரத்தியேக வகுப்புகளை நடத்த பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

அதற்கமைய முக்கவசங்கள் இன்றி பயணிக்கும் மற்றும் முகக்கவசங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் இருப்பவர்களை பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு விசேட மருத்துவ ஆலோசனை வகுப்புகளை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்ததைத் தொடர்ந்து முகக்கவசம் அணிவது நாட்டில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், மேல் மாகாணத்தில் முகக்கவசம் அணியாத மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றாத 3,061 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முகக்கவசம் அணியாமை தொடர்பாக 2093 பேரும் சமூக இடைவெளியை பின்பற்றாத 968 பேரும் இவ்வாறு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என மேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கருணாவும் ஞானசாரவும் கல்முனையை கலவர பூமியாக்க இடமளிக்கவே கூடாது!

## மு.காவின் பிரதித் தலைவர் ஹரீஸ் வலியுறுத்து



கருணாவும், ஞானசார தேரரும் கல்முனையைக் கலவர பூமியாக மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது. ஐக்கியமாக இருக்கும் தமிழ் – முஸ்லிம் ஒற்றுமையை சீர்குலைக்கும் விதத்தில் இருவரும் பேசி வருகின்றார்கள். இவ்வாறான இனவாதிகளின் ஆசைகளுக்கு இடமளிக்கக்கூடாது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனையிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் அல்லாமல், கலவர பூமியாக மாற்றுவதற்கான முஸ்தீபுகள் தற்போது நடைபெறுகின்றன.

கருணா அம்பாறைக்கு வந்த பின்னர் முஸ்லிம்களைக் கேவலமாகப் பேசுவதும், முஸ்லிம்களை வந்தேறு குடிகள் என்று மிருகத்தை விடக் கேவலமாகக் கூறிவருவதையும் கட்சியின் பிரதித் தலைவர் என்ற வகையில் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

கல்முனை வடக்கு பிரதேச தரமுயத்தும் விடயத்தில் கலகொட அத்தே ஞானசார தேரர் கூறுபோடுவதாகக் கூறியிருப்பதும் ஞானசார தேரரின் படையெடுப்பு என்பதும் வன்முறையைத் தூண்டுவதாகும். எனவே, கல்முனை கருணாவின் அப்பன் வீட்டு சொத்தல்ல என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

கல்முனை முஸ்லிம் தலைவர்கள் கட்டி காத்த நகரம். எம்மைச் சிதைத்தால் முஸ்லிம்கள் மாவட்டத்தில் சிறுபான்மையாக்கபடலாம் என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது – என்றார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் டெலிபோன் சின்னத்தில் போட்டியிடும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம். ஹரிஸுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தவிசாளர் சேகு இஸ்ஸதீன், கல்முனை மாநகர சபை முதல்வர், பிரதி முதல்வர், உறுப்பினர்கள், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர், முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# படிப்பறிவு இல்லாத குருநாகல் மேயரினால் புவனேகபாகுவின் அரச மண்டபம் தகர்ப்பு!

## தயாசிறி கடும் விசனம்

போத்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் மட்டுமல்லாது யாழ்ப்பாணம் இராஜ்ஜியத்தின் ஆரிய சக்கரவர்த்திகள் கூட கை வைக்காத இரண்டாவது புவனேகபாகுவின் அரச மண்டபத்தின் மீது குருநாகல் மாநகர சபை மேயர் துஷார சஞ்ஜீவ கைவைத்துள்ளார்.

–இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

படிப்பறிவு இல்லாததே அவரது இந்தச் செயலுக்குக் காரணம் எனவும் அவர் விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

குருநாகல் மாநகர மேயர் ஆரியச் சக்கரவர்த்திகளை விட முன்நோக்கிச் சென்றுள்ளார். கிராமங்களில் இருக்கும் படிப்பறிவு இல்லாதவர்களை இப்படியான இடங்களுக்கு அனுப்பினால், இவ்வாறான சம்பவங்களே நடக்கும்.

குருநாகல் மாநகர மேயர் தான் 8ஆம் வகுப்பில் கூட தேர்ச்சி பெறாதவர் என்பதை நிரூபித்துள்ளார் – என்றார்.

# அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வாக்களிப்பதற்கு அத்தியாவசியம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்கு வாக்காளர்கள் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் கட்டாய தேவைப்பாடாகும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு இன்று (திங்கட்கிழமை) அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், நாட்டில் ஒகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலின் போது வாக்களிப்பதற்கு வாக்காளர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் ஒரு கட்டாய தேவைப்பாடாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வாக்காளர்கள் வாக்களிக்கும்போது, தேசிய அடையாள அட்டை, செல்லுபடியான கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம், அரசாங்க சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.07.2020 இல் வெளியிடப்பெற்றது.